ஆண்டு பட்டிகை வழக்கு எண்.54/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 54/2025 | LW– 1 | PW– 1 |
| Name | : கிருபாகரன் ( கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) | | |
| Father's/Husband's Name | : சீனிவாசன் | | |
| Village | : தலைமை காவலர் | | |
| Taluk | : நத்தம் காவல் நிலையம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 46/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of January 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**மனு எண்.1767/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நான் காவல்துறை பொறுப்பு அதிகாரியின் உத்தரவின்படி செயல்படுவேன் என்றால் சரிதான். குற்றம் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் எத்தனாவது பீட்டில் உள்ளது என்றால் ஒன்றாவது பீட் ஆகும். எனக்கு தகவல் ஆனது 15:45 மணிக்கு கிடைத்தது. யார், யார் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் நானும் என்னுடன் பணி புரியும் ராபர்ட் லாரன்ஸ் (HC 131), சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் ஆகியோர் சென்றோம். சம்பவ இடத்தில் வழக்கு சொத்து இருப்பதாக யார் தகவல் சொன்னார்கள் என்றால் அது ரகசிய தகவல் ஆகும். ரகசிய தகவலாளியும் என்னுடன் காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் எனது சொந்த வாகனத்தில் சென்றேன். வழக்கு சொத்தை எதிரியின் வீட்டில் எதிர் திசையில் இருந்து எடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

3. என்ன வழக்கு சொத்துக்கள் எடுக்கப்பட்டது என்றால் 180 மி.லி. அளவுள்ள பாண்டிச்சேரி மது வகைகளான புளூ கிரேப் பிராந்தி 10 பாட்டில், 180 மி.லி. அளவுள்ள Crown of Crowns பிராந்தி 21 பாட்டில்களும், சீல் மற்றும் லேபிள் இல்லாமல் திறக்கப்பட்ட நிலையில் 2 மது பாட்டில்களும் எடுக்கப்பட்டது. மேற்படி சொத்துக்கள் எதில் இருந்தது என்றால் பிளாஸ்டிக் சாக்குப் பையில் இருந்தது. நீதிமன்றத்தில் வழக்கு சொத்து ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்றால் சரியாக தெரியவில்லை. சம்பவ இடத்திற்கு வடக்கு பக்கம் தார் ரோடு உள்ளது. கிழக்கு பகுதியில் சரியாக ஞாபகமில்லை. பாண்டிச்சேரி மது வகைகள் என்று எப்படி தெரியும் என்றால் சரியாக தெரியவில்லை.

4. வழக்கு சொத்தை எடுக்கும்போது என்னுடன் ராபர்ட் லாரன்ஸ் (HC 131), சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் இருவரும் இருந்தார்கள். எத்தனை மணிக்கு வழக்கு சொத்து எடுக்கப்பட்டது என்று ஞாபகமில்லை. விசாரணை அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் அவருடன் சென்றேன் என்றாலும், எனக்கு இந்த வழக்கு பற்றிய விபரங்கள் தெரியாது என்றாலும், நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.22 15:07:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.54/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 54/2025 | LW– 2 | PW– 2 | |
| Name | : ராபர்ட் லாரன்ஸ் ( கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) | | |
| Father's/Husband's Name | : தைனீஸ் | | |
| Village | : தலைமை காவலர் | | |
| Taluk | : நத்தம் காவல் நிலையம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 39/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of January 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**மனு எண்.1767/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. வழக்கு சொத்துக்களை எங்கு வைத்து கைப்பற்றினோம் என்றால் தேத்தாம்பட்டி கிராமத்தில் வைத்து கைப்பற்றினோம். வழக்கு சொத்தை கைப்பற்றும்போது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் கிருபாகரன் என்பவரும் சார்பு ஆய்வாளர் கிருஷ்ணகுமார் என்பவரும் இருந்தார்கள். வழக்கு சொத்து கைப்பற்ற இடத்தில் தெற்கு பக்கம் என்ன இருந்தது என்றால் சரியாக தெரியவில்லை. 09.09.2024ம் தேதி 15.45 மணிக்கு கைப்பற்றினோம். விசாரணை அதிகாரி என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் சம்பவ இடமான தேத்தாம்பட்டியில் வைத்து விசாரித்தார். வழக்கு சொத்துக்கள் ஆனது பிளாஸ்டிக் சாக்கில் இருந்தது. அந்த பிளாஸ்டிக் சாக்கு என்ன ஆனது என்றால் அது பற்றி தெரியாது. நான் சொன்னது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் விசாரணை

**அதிகாரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.22 15:08:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.54/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 54/2025 | LW– 3 | PW– 3 |
| Name | | : அழகுராஜ் ( ஒப்புதல் வாக்குமூல சாட்சி) | |
| Father's/Husband's Name | | : பழனியாண்டி | |
| Village | | : தலைமைக் காவலர் | |
| Taluk | | : சாணார்பட்டி காவல் நிலையம் | |
| District | | : திண்டுக்கல் | |
| Age | | : 37/2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of January 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**மனு எண்.1767/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விசாரணை அதிகாரி என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார் என்றால் 12.09.2024ம் தேதி காலையில் காவல்நிலையத்தில் இருந்த பொழுது என்னையும், என்னுடன் வேலை செய்த முதல் நிலை காவலர் ஜெரால்ட் ராஜா என்பவரையும் குற்ற எண்.499/2024 தொடர்பாக தேத்தம்பட்டிக்கு வரசொன்னதால் சென்றோம். அங்கு எங்கள் முன்னிலையில் எதிரியை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளாக நானும், ஜெரால்டு ராஜா என்பவரும் கையொப்பம் செய்தோம். அப்பொழுது மணி சுமார் 8.15 இருக்கும். எதிரியை விசாரிக்கும் பொழுது அவர் எங்கு சென்று வந்ததாக தெரிவித்தார் என்றால் உறவினருடன் கோவிலுக்கு சென்று விட்டு வந்ததாக சொன்னார். எதிரியின் தந்தை இறந்ததாக எதிரி சொன்னாரா என்றால் இல்லை. எதிரி என்ன படித்துள்ளார் என்று சொன்னாரா

என்றால் தெரியவில்லை. எனது முன்னிலையில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் தரவில்லை என்றாலும் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், எனது அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.22 15:08:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்